மதிப்பீடாக அதைத்தான் எடுத்துக் கொண்டிருந்தார்கள். தற்சமயம் கைட்லைன் வேல்யூ-வை மதிப்பீடாக எடுப்பதால் கடன் வாங்கி தொழில் துவங்குவோர் சிரமப்படுகிறார்கள். ஆகவே தமிழகத்தில் விரைவாக தொழில் முன்னேற்றம் ஏற்படுகிற இந்தச் சூழ்நிலையில் இதனை மறுபரிசீலனை செய்து அந்த விதிமுறைகளை மாற்றியமைத்து சொத்தினுடைய கைட்லைன் வேல்யூ-க்கு பதிலாக மார்க்கெட் வேல்யூ-வை எடுத்துக் கொண்டால் அந்தத் தொழில் முனைவோர்களுக்கெல்லாம் எளிதாக இருக்கும். தொழில் வளர்ச்சியும் விரைவாக இருக்கும். அதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மார்க்கெட் வேல்யூ-ஐ எடுத்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்கெனவே அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் நலத்துறை கார்ப்பரேஷன் மூலமாக வழங்கப்படும் கடன்கள் எல்லாம் டைகோ மூலமாக வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். அவை டைகோ மூலமாக விரைவாக வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரை ராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை வந்துள்ள விண்ணப்பங்கள் அத்தனைக்கும் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இனி எவ்வளவு வந்தாலும் வழங்குவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 170, திரு. எச். எம். ராஜூ, இருக்கையில் இல்லை. அவருக்குப் பதில் டாக்டர் எம். கருப்புசாமி கேட்கிறார்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

170—

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை நாற்றுக்கள் இலவசமாக வழங்குதல்

***36650—திரு. எச். எம். ராஜூ :**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

1995 மார்ச் 30]

(அ) நீலகிரி மாவட்டத்தில் கடந்த நவம்பரில் ஏற்பட்ட புயல் மழையால் ஏற்கெனவே வழங்கப்பட்ட தேயிலை நாற்றுக்கள் சேதமடைந்ததால் மீண்டும் தேயிலை நாற்றுக்கள் இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வரும் ஜூன் மாதம், நாற்றுக்கள் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நீலகிரி மாவட்டத்தில் கடந்த நவம்பரில் ஏற்பட்ட புயல் மழையால் ஏற்கெனவே வழங்கப்பட்ட தேயிலை நாற்றுக்கள் சேதமடைந்ததால், மீண்டும் தேயிலை நாற்றுக்கள் அதற்கு ஈடு செய்ய இலவசமாக வழங்கும் செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் நீலகிரி மாவட்டத்தில் ஆதிதிராவிட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் மானியமாகவும், இலவசமாகவும் தேயிலை நாற்றுக்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு நாற்றுக்கள் இலவசமாக வழங்கப்பட்டாலும் கூட, கரடுமுரடான நிலத்தைப் பண்படுத்தி ஏக்கருக்கு 4000 நாற்றுக்கள் நடவேண்டி இருக்கிறது. நடுவதற்கு ஒரு ஏக்கருக்கு ஒரு ரூபாய் 50 பைசா வரையில் செலவாகிறது. இப்படி ஒரு ஏக்கருக்கு 6000 ரூபாய் வரையில் செலவாகிறது. கடந்த நவம்பர் மாதத்தில் ஏற்பட்ட கொடுமையான புயல் மற்றும் மழையால் அந்த நிலங்கள் எல்லாம் பாழ்பட்டுவிட்டன. ஒரு ஏக்கருக்குக் கிட்டத்தட்ட 10000 ரூபாய் செலவு செய்து நட்ட நாற்றுக்கள் அனைத்தையும் மழை அழித்துவிட்டதால் அந்த ஏழை விவசாயிகள் வாழ வழியின்றித் தவிக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு மீண்டும் ஒருமுறை அந்த நாற்றுக்களை இலவசமாக வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைவாழ் மக்களுக்கும், ஆதிதிராவிட மக்களுக்கும் இலவசமாக தேயிலை நாற்றுக்கள் ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன. அந்த உழவர் பெருமக்கள் அவர்களுடைய முயற்சியினால் நிலத்தைப் பண்படுத்தி நடவு செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதுபோல் அரசு இலவசமாக வழங்குகின்ற நாற்றுக்களை ஒருவருக்கே தொடர்ந்து கொடுப்பது என்று சொன்னால் மற்ற

உழவர்களுக்குக் கிடைக்க முடியாத நிலைமை ஏற்படும். எனவே இந்த வினாவில் குறிப்பிட்டவாறு கடந்த ஆண்டில் பெருமழை என்பது அவ்வளவாக இல்லை. அதிகமாக பாதிக்கப்பட்டிருப்பதாகவும் அரசுக்கு அதிகாரிகள் செயற்குறிப்பு அனுப்பவும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 171, டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர்.

171—

வணிக நலவாரியம் அமைத்தல்

***33721—டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை :**

மாண்புமிகு வணிகவரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வணிக நலவாரியம் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

முற்பகல் 10.25

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கன்னியாகுமரி மாவட்டதிற்கு என்று தனியாக வணிக நல வாரியம் ஏதும் அமைக்கப்படவில்லை. தமிழகம் முழுவதற்கும் ஒட்டுமொத்தமாக வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டு தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகர்களுக்கும் அரசுக்கும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள மாவட்டந்தோறும் வணிகர் நல வாரியத்தின் கிளைகள் ஆரம்பிக்கப்படுமா அல்லது மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழு அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியாக வணிகர் நல